செய்தி வெளியீடு.36 /2016 நாள் 19.09.2016

| |
|---|
| **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, தொடர்புடைய துறைகளுடன் இணைந்து காய்ச்சலை கட்டுப்படுத்த மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர்கள் உயர் அலுவலர்களுடன் ஆலோசனை!** |
| **காய்ச்சலை கட்டுப்படுத்த பன்முக நடவடிக்கைகள்!** |
| **பொதுமக்கள் பீதியோ பதட்டமோ அடையத் தேவையில்லை!** |

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா** அவர்களின் ஆணைக்கிணங்க மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம் அவர்கள், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள், ஆகியோர் தலைமையில் டெங்கு மற்றும் இதர தொற்றுநோய்கள் தடுப்பு நடவடிக்கைகள் குறித்த ஆய்வு கூட்டம் இன்று 19.09.2016 விழுப்புரத்தில் நடைபெற்றது.

- எல்லா காய்ச்சலும் டெங்கு காய்ச்சல் அல்ல. டெங்கு காய்ச்சல் என்பதும் ஒரு வகையான வைரஸ் காய்ச்சலே. டெங்கு காய்ச்சல் நல்ல தண்ணீரில் உற்பத்தியாகி பகல் பொழுதில் கடிக்கும் “ஏடிஸ்” வகை கொசுவினால் பரவுகிறது. எனவே, பொதுமக்கள் தங்கள் வீட்டைச் சுற்றியுள்ள பகுதிகள், பூந்தொட்டிகள், அழகு ஜாடிகள், சிறு பாத்திரங்கள், தகர டப்பாக்கள், பயன்படாத டயர்கள், தேங்காய்ச் சிரட்டைகள், ஆட்டு உரல் போன்றவற்றில் தண்ணீர் தேங்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும். தண்ணீர் சேமிக்கும் தொட்டிகளைச் கொசுக்கள் புகாமல் நன்கு மூடி வைக்க வேண்டும்.
- **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா** அவர்களின் அரசு கொசு உற்பத்தியாகும் இடங்களை கண்டறிந்து தமிழகம் முழுவதும் சுகாதாரத்துறை, உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் மாவட்ட நிர்வாகம் மூலம் கூடுதல் களப்பணியாளர்களை அமர்த்தி கொசு முட்டைகள், புழுக்கள் மற்றும் வளர்ந்த கொசுக்கள் ஆகியவற்றை போர்க்கால அடிப்படையில் அழித்தும் ஒழித்தும் வருகிறது.
- மேலும், தமிழகத்தில் எலிசா முறையில் டெங்கு காய்ச்சலை கண்டுபிடிக்கும் மையங்கள் 75–ஆக உயர்த்தப்பட்டுள்ளது. உலக சுகாதார நிறுவனத்தால் (World Health Organisation) கண்டறியப்பட்ட 29 வகையான வைரஸ் காய்ச்சல்களையும் கண்டறியும் வசதிகள் தமிழகத்தில் உள்ளது.
- அரசு மருத்துவமனைகளில் தேவையான பரிசோதனைக் கருவிகள், மருந்து மாத்திரைகள், இரத்தம், இரத்த தட்டணுக்கள் தேவையான அளவு இருப்பில் உள்ளது. இயற்கையான முறையில் நோய் எதிர்ப்பு சக்தியை வலுப்படுத்தி காய்ச்சலை குணப்படுத்தும் நிலவேம்பு குடிநீர் இலவசமாக வழங்கப்படுகிறது.
- அனைத்து மாவட்டங்களிலும் களப்பணியாளர்களுக்கும், மருத்துவர்கள் மற்றும் மருத்துவம் சார்ந்த பணியாளர்களுக்கும், தனியார் மருத்துவர்களுக்கும் தொடர் சிறப்பு பயிற்சிகள் அளிக்கப்படுகிறது.

- பொது சுகாதாரம் மற்றும் நோய்தடுப்பு இயக்குநர் அலுவலகத்தில் உள்ள கட்டுப்பாட்டு அறை வலுப்படுத்தப்பட்டு 24 மணி நேரமும் நிலைமையை கண்காணிக்கப்படுகிறது. தேவைப்படும் இடங்களிலும் கூடுதல் மருத்துவர்கள் மற்றும் சிறப்பு மருத்துவர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

- தமிழகம் முழுவதும் போலி மருத்துவர்களை கண்டறிந்து அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும் பணியும் முடுக்கிவிடப்பட்டுள்ளது. உரிய மருந்து சீட்டு இல்லாமல் மருந்து கொடுக்கும் மருந்து கடைகள் மீதும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

இதுபோன்ற பன்முக நடவடிக்கைகள் (Multi Dimensional Activities) மூலம் தமிழ்நாட்டில் காய்ச்சல் மற்றும் தொற்றுநோய்கள் பரவுவது முழு கட்டுப்பாட்டில் உள்ளது. மேலும், கொசு ஒழிப்பு மற்றும் டெங்கு காய்ச்சல் ஒழிப்பு பணிகளை மக்கள் இயக்கமாகவே மாற்றவும், தொடர்புடைய துறைகளுடன் இணைந்து ஒருங்கிணைப்பு பணிகளை தொய்வில்லாமல் மேற்கொள்ளவும் அறிவுறுத்தப்பட்டது. பொதுமக்கள் காய்ச்சல் கண்டவுடன் உடனடியாக அருகில் உள்ள அரசு மருத்துவமனைகளை அணுகி தகுந்த சிகிச்சையை பெற வேண்டுகோள் விடுத்த மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் பொதுமக்கள் டெங்கு காய்ச்சல் குறித்து பீதியோ பதட்டமோ அடையத் தேவையில்லை எனவும் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை முதன்மைச் செயலாளர் திரு.ஜெ.ராதாகிருஷ்ணன்,இ.ஆ.ப., விழுப்புரம் மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., மாநிலங்களவை உறுப்பினர் டாக்டர்.இரா.இலட்சுமணன், விழுப்புரம் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.சு.ராஜேந்திரன், ஆரணி நாடாளுமன்ற உறுப்பினர் திரு.செஞ்சிசேவல் வெ.ஏழுமலை, உளுந்தூர்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் திரு.இரா.குமரகுரு, கள்ளகுறிச்சி சட்டமன்ற உறுப்பினர் திரு.அ.பிரபு, பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறை இயக்குநர் டாக்டர்.கே.குழந்தைசாமி, மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் துறை இயக்குநர் மரு.கே.செங்குட்டுவன், முண்டியம்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர் டாக்டர்.வசந்தாமணி, இணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) டாக்டர்.ஜோதி, விழுப்புரம் மாவட்ட ஊராட்சித் தலைவர் திருமதி.அலமேலுவேலு, துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) டாக்டர்.சவுண்டம்மாள் (விழுப்புரம்), டாக்டர்.ஜெமினி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் டாக்டர்.மணி, உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்) திருமதி.ஜீஜாபாய், முதன்மைக் கல்வி அலுவலர் திரு.ச.மார்ஸ், மாவட்ட உணவு பாதுகாப்பு அலுவலர் டாக்டர்.வரலட்சுமி, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட அலுவலர் திருமதி.அன்பழகி, செயற்பொறியாளர்கள் திரு.ராஜா (விழுப்புரம்), திரு.வரதராஜபெருமாள் (கள்ளக்குறிச்சி), அனைத்து வட்டார வளர்ச்சி அலுவலர்கள், அனைத்து வட்டார மருத்துவ அலுவலர்கள், அனைத்து பேரூராட்சி செயல் அலுவலர்கள், அனைத்து ஊராட்சி ஒன்றிய செவிலியர்கள் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி – மக்கள் தொடர்பு அலுவலகம், விழுப்புரம்.**

—*—*—